# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இந்திய வீடமைப்புத்திட்டத்தின் மூன்றாம் கட்ட பயனாளிகளுக்கு உயர் ஸ்தானிகர் சூரியக்கல மின்விளக்குகளை விநியோகித்தார்

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் 2024 ஆகஸ்ட் 19 முதல் 21 வரை மத்திய மாகாணத்திற்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒரு பகுதியாக ஆகஸ்ட் 20 ஆம் திகதி மாத்தளை மாவட்டத்தின் பிடகந்த, ரத்தோட்ட தோட்டத்திற்கும் விஜயம் செய்திருந்தார்.

2. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக இந்திய வீடமைப்பு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் கட்டப்படும் 4,000 வீடுகளில் பிடகந்த, ரத்தோட்ட தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் உள்ளடங்குகின்றன. இம் மூன்றாம் கட்டம் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளது.

3. 2024 ஆகஸ்ட் 20 ஆம் திகதி உயர் ஸ்தானிகர் மேற்கொண்ட இவ்விஜயத்தின் போது, இத்தோட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு சூரிய ஒளி விளக்குகளை வழங்கிவைத்தார். இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் உள்ள அனைத்து 4,000 பயனாளி குடும்பங்களுக்கும் இவ்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

4. இந்திய வம்சாவளி தமிழ் சமூகம் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மக்களுக்காக இந்திய அரசால் ஒதுக்கப்பட்ட 750 மில்லியன் இந்திய ரூபா பெறுமதியான சிறப்பு பல்நோக்கு நன்கொடை உதவித் தொகுப்பின் கீழ் குறித்த சூரியக்கல மின்விளக்குகள் விநியோகம் இடம்பெறுவதுடன், இந்த திட்டமானது கடந்த ஆண்டு ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது அறிவிக்கப்பட்டது.

5. இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்ட பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன, இதன் கீழ் பெருந்தோட்டப் பிரதேசங்களில் மேலும் 10,000 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*********

கொழும்பு
22 ஆகஸ்ட் 2024